## தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம் - 2018

### 1.1 அபிப்பிராயம்

தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

மருத்துவ நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மருத்துவ நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

மருத்துவ நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மருத்துவ நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மருத்துவ நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன்

அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மருத்துவ நிறுவகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மருத்துவ நிறுவகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதன் மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் விசேட அதிகாரத்திற்கிணங்க கொடுக்கல் வாங்கல்கள் நிறைவேற்றப்பட்டது எனவும் பிரயோகிக்கக்கூடிய அறிக்கையிடல் நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக அனுமதிப்பதற்கும் அவசியமாக கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்பட்டிருந்ததும் எனவும் சொத்துக்களிற்கான கணக்களிப் பொறுப்பை பேணுவதற்கும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது விசேட அங்கீகாரத்திற்கு இணங்க மாத்திரம் சொத்துக்களை அணுகுவதை அனுமதிப்பதற்கும் மற்றும் தற்போதுள்ளவாறான சொத்துக்களுடன் நியாயமான இடைவெளிகளில் மற்றும் பொருத்தமான நடவடிக்கை ஏனைய வேறுபாடுகளுடன் தொடர்பாக எடுக்கப்பட வேண்டும் என்பவற்றையும் நியாயமாக உறுதிப்படுத்துவதற்கு உள்ளகக் கணக்கீட்டு போதியளவு கட்டுப்பாடுகளிற்கு “திட்டமிடுதல் மற்றும் பராமரிப்பு” என்ற முறைமையொன்று நிறுவகத்திற்கு தேவைப்படுகின்றது.

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய ரூபா 14,709,918 தொகையான கணக்கு மீதியில் ரூபா 9,961,937 மீதியொன்று 650 நாட்களை விட பழையதாக இருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அது மொத்த பெறவேண்டிய மீதியில் 67.72 சதவீதமாகும். அவ்வாறே 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தனியார் பேரூந்துக் கம்பனியிலிருந்து ரூபா 742,312 தொகை 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் அறவிடப்படாது காணப்பட்டதுடன் அப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மெட்ரோ பொலிட்டன் பெயரில் பேரூந்து கம்பனியொன்று இதுவரையிலும் செயற்படாமையினால் அது தொடர்பாக இலங்கை போக்குவரத்துச் சபை தலைவருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | நிலுவை மீதியை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிறுவகத்தால் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 33,588,765 தொகையிலிருந்து ரூபா 6,990,722 தொகை அதாவது 21 சதவீதம் 650 நாட்களுக்கு நாட்களுக்கு மேற்பட்ட காலம் முதல் தீர்த்து வைக்கப்படாமல் காணப்பட்டது. | 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 9,428,298 தொகை செலுத்தப் பட்டிருந்ததுடன் மிகுதிப் பணத்தைச் செலுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | பழைய மீதியை துரிதமாக அறவிடுவதற்கோ அல்லது மேலும் செலுத்துவதற்கு பொறுப்பில்லையாயின் வருமானத்திற்கு எமுப்பதற்கோ நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) 1988 இன் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இன் | மருத்துவ பரிசோதனைக்காக பயன்படுத்தி அகற்றப்பட்ட | அவ்வாறு அகற்றப்படுகின்ற பொருட்களைப் பெறும் | கழிவுப்பொருட்களை அகற்றுதல் சரியான முறையின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | 53 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்டத்தின் 06 ஆம் பிரிவு | ஊசிகள், பஞ்சு போன்ற இரசாயன உபகரணங்கள் மற்றும் கழிவுப் பொருட்கள் என்பவற்றை அகற்றுவதற்காக சரியான முறைமையொன்று பின்பற்றப்படாதிருந்ததுடன . அவற்றை நிறுவகத்தின் வளவில் சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் சேகரித்து வைக்கப்பட்டிருந்தது. | இடமொன்று தொடர்பாக ஆராய்ந்து பார்த்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அரச துறைகளில் விசாரிக்கப்பட்டுள்ளது. | பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 ஆம் பிரிவு | நிதி அமைச்சரினதும் உரிய அமைச்சரினதும் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நிறுவகத்தால் நிலையான வைப்பு, திறைசேரி உண்டியல் மற்றும் மற்றும் திறைசேரி பிணை முறிகளில் நிதி முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 857,072,581 தொகையான மீதி காணப்பட்டது. | பதில் கிடைத்திருக்கவில்லை. | உரிய அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 757 | 2018 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். | மெய்மையாய்வு அறிக்கை உரிய பிரிவுகளுக்கு சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | குறித்த கால எல்லையில் மெய்மையாய்வுச் சபை அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2000 சனவரி 11 ஆந் திகதிய பீஎப்/பீஈ 5 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | பொதுத் திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் நிறுவகத்தின் ஊழியர்களுக்காக ரூபா 41,687,959 தொகை வருகைப் படியாக செலுத்தப்பட்டிருந்தது. | பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மாத்திரம் பெறப்பட்டிருந்தது. | உரிய அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | 2015 செப்தெம்பர் 25 ஆந் திகதிய எஸ்பீ/02/01 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக 2018 ஆம் ஆண்டின் திசெம்பர் 24 ஆந் திகதி ஊழியர் ஒன்றுகூடல் கண்டி மாவட்டத்தின் ஹோட்டல் ஒன்றில் நடாத்துவதற்காக ரூபா 2,546,685 தொகை செலவிடப்பட்டிருந்தது. | பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மாத்திரம் பெறப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் நியதிகளுக்கு இணங்க சிக்கனமாக பயன்படுத்துவதற்கு முகாமைத்துவம் கண்காணிக்க வேண்டும். |
| (ஊ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.12 ஆம் பிரிவு | நிறுவக ஊழியர்களின் நலன்புரிகளுக்காக பிரயாணிகள் சேவை அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் ஆண்டின் போது அதற்காக ரூபா 9,428,298 தொகையான செலவினம் செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக பொது முயற்சிகள் திணைக்களத்தினதும் பொதுத் திறைசேரியினதும் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மாத்திரம் பெறப்பட்டிருந்தது. | இந்த செலவினங்களைச் செய்வதற்கு உரிய நிறுவனங்களிலிருந்து சரியான அங்கீகாரத்தை மாத்திரம் பெறுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 339,605,034 மிகையாக இருந்ததுடன் அதற்கு நெரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 236,394,046 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 103,210,988 தொகையான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு மீளாய்வாண்டில் மருத்துவ சான்றிதழ் சேவை வருமானம் ரூபா 126,606,687 இனாலும், முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 3,531,217 இனாலும் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறுவகத்தால் அனுராதபுரம் மற்றும் கண்டி கிளை அலுவலகங்களுக்காக கட்டிடம் வீதம் நிர்மாணிப்பதற்கு 2018 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், | அமைச்சரவை அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. | செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்கும் பணிகளை மாத்திரம் வரையறுக்காமல் |

| | | | |
|---|---|---|---|
| | தேவையான அங்கீகாரம் பெறப்படாமையினால் அந்த காணிகளில் கட்டிடங்களை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் 2019 ஏப்ரல் மாதம் வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக தற்போது இந்த அலுவலகங்கள் வாடகை அடிப்படையில் பெறப்பட்ட கட்டிடங்களில் நடாத்திச் செல்லப்படுவதுடன் ஆண்டின் போது, அனுராதபுரம் கிளை அலுவலகத்திற்காக ரூபா 696,875 தொகையும், கண்டி கிளை அலுவலகத்திற்காக ரூபா 1,096,500 தொகையும் வாடகைப் பணமாக செலுத்தப்பட்டுள்ளது. | | அந்தப் பணிகளையும் நிறைவேற்றுவதற்கு செயற்பட வேண்டும். |
| (ஆ) | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுகின்ற விசேட முற்பணத் தொகை ரூபா 4,000 ஆம் இருந்த போதிலும், பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் அந்தத் தொகையை விஞ்சி ரூபா 25,000 வரை அதிகரித்து ஆண்டின் போது உத்தியோகத்தர்களுக்கு ரூபா 852,830 தொகை விசேட முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது. இவ்வாறு மேலதிகமாகச் செலுத்துவதற்காக நிறுவகத்தால் பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு பெறப்பட்டிருக்கவில்லை. | பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மாத்திரம் பெறப்பட்டிருந்தது. | இதற்காக பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |
| (இ) | நிறுவகத்தால் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் கீழ் 10 தவணைகளில் அறவிடும் அடிப்படையில் உத்தியோகத்தர்களுக்கு ரூபா 30,000 விழா முற்பணம் வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கி ஆண்டின் போது ரூபா 5,340,500 தொகை முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது. ரூபா 30,000 விழா முற்பணமாக வழங்குதல் அரசாங்கத்தில் காணப்படுகின்ற ஏற்பாடுகளுக்கு இணங்காதிருந்தமையால் அவ்வாறு செலுத்துவதற்கு பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மாத்திரம் பெறப்பட்டிருந்தது. | அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட அளவை விஞ்சி செலுத்துவதாயின் அதற்காக பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 1997 இன் 25 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவக அதிகாரச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் பிரகாரம் நிறைவேற்ற வேண்டிய பணிகள் அதாவது நிறுவகத்தால் எப்போதாவது எந்த வகையான மோட்டார் வாகனங்களுக்கும் ஏற்படும் விபத்துக்கள் மற்றும் தொடர்பான சந்தரப்பங்களின் போது மருத்துவ சேவை மற்றும் உதவிகளை வழங்குதல், செலுத்த வேண்டிய இழப்பீடு அல்லது நட்ட அளவு தொடர்பான ஆலோசனைகள் மற்றும் விசேட ஆசிரியர் மதியுரை வழங்கல், நிறுவகத்தின் இலக்குகளை நிறைவேற்றுவதற்காக சகல மாவட்டங்களிலும், தகுதியான வைத்திய உத்தியோகத்தர் குழாமொன்றை நியமித்தல், கைத்தொழில் கூட்டுத்தாபனம் மற்றும் கைத்தொழில் விபத்துக்கள் தொடர்பான மருத்துவ ஆலோசனைகளையும் சிபாரிசினையும் வழங்குதல், சகல வகைகளுக்கும் உரிய மோட்டார் வாகனங்கள், உடலியல் ரீதியான அல்லது மனநிலை ரீதியான மோட்டார் வாகனங்கள், உடலியல் ரீதியான அல்லது மனநிலை ரீதியான தகுதி மற்றும் திறன் வாய்ந்தவர்களினால் மாத்திரம் ஓட்டப்படுகின்ற அல்லது மிதிக்கப்படுகின்றமை நிறுவனத்தினால் அல்லது ஏனைய முகவர் நிறுவனத்தில் விசாரித்து அல்லது மேற்பார்வைக்காக மற்றும் உரிய அமுல்படுத்தும் அதிகாரத் தரப்பினரால் ஏற்றுக் கொள்ள வேண்டிய மற்றும் அமுல்படுத்த வேண்டிய, போக்குவரத்து மருத்துவ நடவடிக்கைகளின் நியமங்களைத் தயாரித்தல், வரையறைகளை நிர்ணயித்தல் போன்ற பணிகள் நிறுவகத்தால் நிறைவேற்றப்பட வில்லை. | எவ்வாறாயினும், அதிகாரச் சட்டத்தில் காணப்பட்ட பணிகள் சில சந்தர்ப்பங்களின் போது உருவாக்கப்பட்ட வீதி பாதுகாப்பு அதிகாரச்சட்டம் போன்ற சட்டங்களின் மூலம் பணிகள் பிரிக்கப் பட்டிருந்தமையால் அதன் பின்னர் அதிகாரச்சட்டம் திருத்தப்பட்ட சந்தர்ப்பத்தின் போது அந்தப் பணிகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிறுவகம் மூலம் நிறைவேற்ற வேண்டியதாக அதிகாரச்சட்டத்தில் காண்பிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு / அமுல் படுத்துவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறுவகத்தின் பிரதான கட்டிடத்தில் இரண்டாவது மாடியை திருத்துவதற்காக 01 ஆவது கட்டத்தின் நிர்மாணங்களில் சேமிக்கப்பட்ட ரூபா 5,319,926 தொகை அதாவது மொத்த ஒப்பந்தப் பெறுமதியில் 13 சதவீத தொகையை ஈடுபடுத்தி ஆரம்ப மதிப்பீட்டில் உள்ளடக்கப்படாத ரூபா 4,923,737 தொகையான மேலதிக வேலை நிறைவேற்றப்பட்டிருந்தது. | தேவையின் அடிப்படையில் மேலதிக வேலைப்பகுதி மேற்கொள்ளப்பட்டுள்ளது. | ஆரம்ப மதிப்பீட்டில் உள்ளடக்கப்படாத மேலதிக வேலைகளை நிறைவேற்றுவதற்காக அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |
| (ஆ) | கட்டிடத்தை நவீனமயப்படுத்தும் 02 ஆவது கட்டத்தின் நிர்மாண வேலைகளுக்காக கேள்வி கோரலின்றி மேற்கூறப்பட்ட ஒப்பந்தக்காரருக்கே 2019 சனவரி 21 ஆந் திகதியளவில் வேலை பூர்த்தி செய்யும் அடிப்படையில் ரூபா 43,923,641 தொகையான பெறுமதியில் ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட போதிலும், 2019 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் உடன்படிக்கை செய்யப்பட்ட வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. எனினும், ஒப்பந்தகாரரின் உடன்படிக்கையின் பிரகாரம் தாமதக் கட்டணம் அறவிடப்படவில்லை. இந்த ஒப்பந்தத்தால் இதுவரை செய்யப்பட்ட வேலைக்காக கொடுப்பனவு செய்யும் போது வற்வரியுடன் ரூபா 807,848 தொகை மேலதிமாக ஒப்பந்தகாரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 1,448,776 தொகையான 04 விடயங்களின் உடன்படிக்கையின் பிரகாரம் மற்றும் இணங்கப்பட்ட மாதிரிகளின் பிரகாரம் ஈடுபடுத்த வேண்டிய நிர்மாண பொருட்களை பயன்படுத்தி பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் அதற்காக மதியுரையாளர் அங்கீகாரமும் பெறப்படப்பட்டிருக்கவில்லை. | வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டிய கால அட்டவணை தொடர்பான நவீனமயப்படுத்தல் செயற்பாடுகள் நடைபெற்ற கூட்டங்களின் போது இணக்கப்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. தாமதக் கட்டணம் அறவிடுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | உடன்படிக்கை நிபந்தனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) நிறுவகத்தின் இரண்டாவது மாடி நவீனமயப்படுத்தும் செயற்பாடுகளுக்காக 2017 ஆம் ஆண்டிற்கு முன் ரூபா 4,639,631 செலவினமொன்று செலவிடப்பட்டிருந்தது. மீண்டும் 2017 ஆம் ஆண்டின் போது கட்டிடத்தை நவீனமயப்படுத்தும் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக புதிய ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திட்டு அதற்காக ரூபா 46,348,295 தொகையான செலவினம் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்கு முன்னர் செய்யப்பட்ட மொத்தச் செலவினமான ரூபா 4,639,631 தொகை பயனற்ற செலவினமாக இருந்தது. | நவீனமயப்படுத்துதல் காரணமாக மீண்டும் திருத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | கட்டிடத்தை நவீனமயப்படுத்தும் செயற்பாடுகள் நீண்டகாலம் காணப்படும் வகையில் திட்டமிடப்பட்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முகாமைத்துவம் கண்காணித்தல் வேண்டும். இவ்வாறான சிக்கனமற்ற செலவினங்களைச் செய்தல் தொடர்பாக பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் 2017 நவம்பர் 23 மற்றும் 2018 மே 15 ஆந் திகதிகளில் நிறுவகத்தில் 33 பதவிகளுக்காக 454 பதவியணியினா் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், நிறுவகத்தின் 10 பிரதான பதவிகளுக்காக 2019 பெப்ரவரி வரையிலும், ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2018 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் நிறுவகத்தில் 09 நிரந்தர வைத்திய உத்தியோகத்தர்களும், ஒப்பந்த அடிப்படையின் கீழ் 28 வைத்திய உத்தியோகத்தர்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அதன் பிரகாரம் 34 வைத்திய உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | பிரதான பதவிகளுக்குரிய ஆட்சேர்ப்பு தாமதமின்றி மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தின் தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது நாளாந்த மணி நேர அடிப்படையின் கீழ் கடமைகளுக்காக சேர்க்கப்பட்ட வைத்திய உத்தியோகத்தர்களில் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 11 வைத்தியர்கள் கடமைகளுக்காக அறிக்கையிடாதிருந்ததுடன் அவ்வாறு சேவைக்கு அறிக்கையிடாத வைத்தியர்கள் தொடர்பாக போக்குவரத்து ஆணையாளருக்கு அறிவித்து அவர்களுக்கு மருத்துவ சான்றிதழ் விநியோகித்தலை இடையூறு ஏற்படாத வகையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சுகாதார அமைச்சுடன் கலந்துரையாடப் படுகின்றது. | நிறுவகத்தின் பிரதான செயலாற்றலை நிறைவேற்றுவதற்கான பங்களிப்பை வழங்குதல் வைத்திய உத்தியோகத்தர்களாக இருந்தமையால், அந்தப் பதவிகள் வெற்றிடமாக இருந்தமை நிறுவகத்தின் செயலாற்றலுக்கு நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்துகின்றமையால் வெற்றிடங்களை நிரப்புவதற்கு முன்னுரிமை வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் வருடம் முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், நிதிக்கூற்றுக்கள் மாதமொன்று தாமதித்து 2019 ஏப்ரல் 09 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை | குறித்த கால எல்லையில் கணக்குகளைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிறுவகத்தின் நோக்கங்களுக்கு ஏற்ற வகையில் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கட்டிடங்களைப் பெற்றுக் கொள்ளல், மருத்துவ உபகரணங்களைப் பெற்றுக் கொள்ளல், மிகவும் திருப்திகரமான பதவியணியொன்றை நிர்மாணித்தல் என்பவற்றுக்காக பயிற்சி செயலமர்வுகளை நடாத்துதல் போன்ற நோக்கங்களுக்குரிய வகையில் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. | நிறுவகம் நிறைவேற்றுவதற்குள்ள செயற்பாடுகளுக்கு இணங்கும் வகையில் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |